**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No. 161/2019**

**PW14**

| | | |
|---|---|---|
| **Name** | : | மணிமாறன் |
| **Father's Name** | : | பழனி |
| **Village** | : | |
| **Taluk/District** | : | திருவண்ணாமலை |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.01.2026.
A1 to 3 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஜமுனாமரத்தூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 2017 அன்று நான் வெறையூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது குற்ற எண். 229/2017 என்ற வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். எனக்கு முன்பு இருந்த காவல் ஆய்வாளர் திரு. பாலசுப்பிரமணியம் என்பவர் ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை மீண்டும் நான் விசாரித்தேன். அவர்கள் ஆய்வாளர்பாலசுப்பிரமணியனின் வாக்குமூலம் போலவே என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. கடந்த 20.02.2018 அன்று தலைமறைவாக இருந்த எதிரி தனசேகர் என்பவர் நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்றார். பிரேத பரிசோதனை அலுவலுக்கு சென்ற முதல்நிலை காவலர் 299 திரு. முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு. கமலக்கண்ணன் மற்றும் வேலூர் வட்டார தடய அறிவியல் அலுவலர் திரு. அசோக்குமார் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக என் புலன் விசாரணையை முடித்து வழக்கு கோப்பினை மாவட்ட குற்ற உதவி இயக்குநரின் கருத்து பெற்று எதிரியின் மீது சட்டப்பிரிவு 294(b),323,324,506(2),302 r/w 34 IPC ன் படி இறுதி அறிக்கையை 04.04.2018 அன்று தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சாட்சிகள் செந்தில்வடிவேலன் ,காசிவேலு, ஆறுமுகம், மரு.ஸ்ரீவத்சா ஆகியோரை எந்த தேதியில் விசாரணை செய்தேன் என்று கேட்டால் ஞாபகம் இல்லை. வழக்கு கோப்பில் உள்ள அவர்களது வாக்குமூலங்களில் எந்த தேதியில் அவர்கள் விசாரணை செய்யப்பட்டார்கள் என்று காணப்படவில்லை என்றால் சரிதான். மரு. ஸ்ரீவத்சாவின் வாக்குமூலத்தில் காயம்பட்ட சத்தியராஜிக்கு மட்டும்தான் காயத்தின் தன்மை குறித்து கருத்து தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரின் வாக்குமூலம் நான் பதிவு செய்து வழக்கு கோப்புடன் இணைக்கவில்லை. எனக்கு முன் விசாரணை செய்த ஆய்வாளர் பன்னீர்செல்வத்தை விசாரித்து உள்ளாரா என்றால் இல்லை.

2. முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த காவலரின் வாக்குமூலம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ராஜம்மாள், சத்தியராஜின் ஆகியோரது விபத்து பதிவேடு குறித்த தகவலை திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்து பெற்ற காவல் நிலைய போலிசாரிடம் நானோ எனக்கு முன்பு விசாரித்த ஆய்வாளரோ வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கமாக அவ்வாறு செய்வதில்லை. மருத்துவமனையில் இருந்த ராஜம்மாளின் இறப்பு குறிப்பை பெற்ற போலிசாரை நான் விசாரிக்கவில்லை. ராஜம்மாளின் இறப்பு குறிப்பை யார் பெற்றது என்ற விவரம் எனக்கு தெரியாது. அதை பற்றி நான் விசாரிக்கவில்லை. ராஜம்மாள், சத்தியராஜின் ஆகியோரது விபத்து பதிவேடு குறித்த தகவலை திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்து பெற்ற காவல் நிலைய போலிசாரையோ ராஜம்மாளின் இறப்பு குறிப்பை பெற்ற போலிசாரையோ நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

3. காயமுற்ற ராஜம்மாள் மற்றும் சத்தியராஜீன் விபத்து பதிவேட்டின் அசலை இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன் வாங்கினேனா என்றால் இல்லை. எனக்கு முன் விசாரித்த ஆய்வாளர் வாங்கியுள்ளார். ராஜம்மாளின் விபத்து பதிவேட்டின் அசல் என்ன ஆனது என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். ஆனால் அது என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. தற்போது சாட்சி நீதிமன்றத்தில் அசல் விபத்து பதிவேட்டு நகலை ஆஜர்படுத்தவில்லை என்று கூறுகிறார். என்னிடம் காண்பிக்கப்படும் ராஜம்மாளின் விபத்து பதிவேட்டில் திருத்தங்கள் உள்ளது என்றால் இல்லை. அழுத்தி எழுதியதுபோல் உள்ளது. ராஜம்மாளின் விபத்து பதிவேட்டில் திருத்தங்கள் உள்ளது என்றும் நான் வழக்கிற்காக அழுத்தி எழுதப்பட்டுள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. 09.01.2026 அன்று ராஜம்மாளின் விபத்து பதிவேட்டு புகைப்பட நகலை மருத்துவரிடம் சான்று பெற்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 09.01.2026 அன்று வெறையூர் காவல் ஆய்வாளர்தான் ராஜம்மாளின் விபத்து பதிவேட்டு சான்று நகலை இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார் என்றால் சரிதான். அதனுடன் ராஜம்மாளின் விபத்து பதிவேட்டின் தட்டச்சு செய்யப்பட்ட படிவம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராஜம்மாள் மற்றும் சத்தியராஜின் விபத்து பதிவேட்டில் அவர்கள் இருவரும் சுயநினைவுடன்தான் இருந்தார்கள் என்ற தகவல் உள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் சுப்பிரமணியின் புகாரில் என் அம்மாவும், மகனும் மயக்க நிலையில் உள்ளதால் 18.06.2017 அன்று புகார் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். ராஜம்மாளின் விபத்து பதிவேடின் அசல் இறுதி அறிக்கையுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு சிறப்பு காரணம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை.

5. சத்தியராஜ் தன்னை 9.00 மணிக்கு தாக்கியதாகவும், ராஜம்மாள் தன்னை 8.00 மணிக்கு தாக்கியதாகவும் விபத்து பதிவேட்டில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். இறந்த ராஜம்மாளின் அசல் விபத்து பதிவேட்டு நகலில் இவ்வழக்கில் சம்மந்தம் இல்லாத வேறு விவரங்கள் இருந்ததால்தான் அசல் விபத்து பதிவேடு மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்கு தகுந்தாற்போல் மருத்துவரிடம் ராஜம்மாளின் விபத்து பதிவேடு நகல் தயார் செய்து தாக்கல் செய்யப்படுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நடந்த சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், நான் சரியாக புலன் விசாரணை செய்யாமல் எனக்கு முன்பு புலன் விசாரணை செய்த ஆய்வாளருக்கு ஏற்றவாறு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு எதிராக பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்து பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.